திருப்பரங்குன்றம் கோயில் தெப்பத் திருவிழா

திரளான பக்தர்கள் தரிசனம்

திருப்பரங்குன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற சுப்பிரமணிய சுவாமி கோயில் தெப்பத் திருவிழாவில் அலங்கரிக்கப்பட்ட தெப்ப மிதவையில் எழுந்தருளி தெப்பத்தை சுற்றிவந்து அருள்பாலித்த சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை அம்மன். (உள்படம்) சிறப்பு அலங்காரத்தில் சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை அம்மன்.

திருப்பரங்குன்றம், ஜன. 28: திருப்பரங்குன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற சுப்பிரமணிய சுவாமி கோயில் தெப்பத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில் தெப்பத் திருவிழா கடந்த 19- ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் 9- ஆம் நாள் நிகழ்வாக செவ்வாய்க்கிழமை தேரோட்டம் நடைபெற்றது.

விழாவின் சிகர நிகழ்ச்சியான தெப்பத் திருவிழாவையொட்டி புதன்கிழமை காலை 7 மணியளவில் உத்ஸவர் சந்நிதியில் சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை அம்மனுக்கு பால், பன்னீர், சந்தனம் உள்ளிட்ட 16 வகை பொருள்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, சர்வ அலங்காரத்தில் சிறப்பு மகா தீப, தூப ஆராதனைகள் நடைபெற்றன.

பிறகு, சிம்மாசனத்தில் சுவாமி தெய்வானையுடன் சந்நிதி தெரு வழியாக ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள தெப்பக்குளத்தில் எழுந்தருளினார். அங்கு அலங்கரிக்கப்பட்டு தயாராக இருந்த தெப்பத் தேரில் (மிதவை) தெய்வானையுடன் சுப்பிரமணிய சுவாமி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

இதையடுத்து, காலை 9.40 மணியளவில் அங்கு கூடியிருந்த பக்தர்கள் தெப்பத் தேரில் இணைக்கப்பட்டிருந்த வடத்தைப் பிடித்து இழுத்து தெப்பக்குளத்தின் வெளி பிரகாரத்தை சுற்றி 3 முறை வலம் வந்தனர். இதேபோல, இரவில் மின்னொளியில் மீண்டும் சுவாமி, தெய்வானையுடன் 3 முறை வலம் வந்தபோது வாண வேடிக்கைகளும், இசைக் கச்சேரியும் நடைபெற்றன.

இதைத் தொடர்ந்து, மேளதாளங்கள் முழங்க தங்கக் குதிரை வாகனத்தில் சுப்பிரமணிய சுவாமி, தெய்வானையுடன் எழுந்தருளி நகரின் முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்தார். அப்போது சந்நிதி தெருவில் அமைந்துள்ள சொக்கநாதர் கோயில் முன் சூரனை வதம் செய்யும் சூரசம்ஹார லீலை நடைபெற்றது.

விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ப. சத்யபிரியா பாலாஜி, அறங்காவலர்கள் வ. சண்முகசுந்தரம், மணிச்செல்வம், பொம்மத்தேவன், ராமையா, கோயில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

ஜனநாயகன் திரைப்படத்தை தடுப்பது ஜனநாயகத்துக்கு ஏற்றதல்ல



மதுரை, ஜன. 28: ஜனநாயகன் திரைப்படத்தை வெளியிடவிடாமல் தடுப்பது ஜனநாயகத்துக்கு ஏற்றதல்ல என மதிமுக பொதுச் செயலர் வைகோ தெரிவித்தார்.

மதுரையில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

திமுக கூட்டணி உறுதியாகவும், பலமாகவும் உள்ளது. தற்போதைய நிலையில், தமிழக தேர்தல் களத்தில் திமுக கூட்டணியே முதன்மை பெற்றுள்ளது. திமுக ஆட்சி தொடரும். கருத்துகளை மாற்றிக் கூறுவதும், கட்சிகள் அணி மாறுவதும் அரசியலில் இயல்பானதே. எனவே, அதிமுக-அமமுக கூட்டணி குறித்து விமர்சிக்க விரும்பவில்லை.

திமுக துணைப் பொதுச் செயலர் கனிமொழி, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி சந்திப்பு திமுக கூட்டணியில் (திமுக-காங்கிரஸ்) நிலவும் கருத்து மோதல்களுக்கு தீர்வு ஏற்படுத்தியிருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆங்காங்கே ஒரு சில மனக்கசப்புகள் இருந்தாலும், தலைமை அளவில் பேசி முடிவெடுக்கும் போது, அனைத்துப் பிரச்னைகளும் தீர்ந்து விடும்.

கடந்த நான்கரை ஆண்டுகளாக தமிழகத்துக்கு நிதி வழங்காமல் மத்திய அரசு வஞ்சித்து வருகிறது.

இந்த நிலையில், சென்னைக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடி பல்வேறு பொய்களைத் தெரிவித்து, நாட்டு மக்களை ஏமாற்ற முயற்சித்தார். அந்த முயற்சி எடுபடாது என்றார் அவர்.

ஜனநாயகன் திரைப்படத்துக்கு தடை நீடிப்பது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, 'அந்தத் திரைப்படம் வெளியாகாததற்கு என்ன காரணம்? அந்தப் படத்தில் என்ன செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது? எதனால் வெளியீடு தள்ளிப் போகிறது? என்பது குறித்து எனக்கு முழு விவரம் தெரியாது. இருப்பினும், ஒரு திரைப்படத்தை வெளியிட விடாமல் தடுப்பது ஜனநாயகத்துக்கு ஏற்றதல்ல' என்றார் வைகோ.

தமிழக கூட்டணி விவகாரத்தில் பாஜக தலைமை தலையிடுவதில்லை

மதுரை, ஜன. 28: தமிழக கூட்டணி விவகாரத்தில் பாஜக தலைமை தலையிடுவதில்லை என அந்தக் கட்சியின் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

மதுரையில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

தமிழக கூட்டணி விவகாரத்தில் பாஜக தலைமை தலையிடுவதில்லை. தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமியே தலைமை வகிக்கிறார். அவர்தான் பாமக தலைவர் அன்புமணியுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு கூட்டணியை உறுதி செய்தார். இதேபோல, அமமுகவுடனான கூட்டணியையும் அவரே உறுதி செய்தார்.

எனவே, தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைய பாஜக மேலிடம் அழுத்தம் கொடுத்ததாக முன்னாள் அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் கூறியது அர்த்தமற்றது.

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் அதிமுக-பாஜக கூட்டணிக்கு வருவது குறித்து தனிப்பட்ட முறையில் கருத்துத் தெரிவிக்க இயலாது. அவர் ஒரு கட்சியிலிருந்து வெளியே வந்தவர்.

அடுத்த கட்சியின் உள் விவகாரத்தில் நான் தலையிட முடியாது. எனவே, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் ஓ. பன்னீர்செல்வம் இடம் பெறுவது குறித்து காலம்தான் பதில் சொல்லும். பிரிந்தவர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்பதே என் விருப்பம்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மேலும் பல கட்சிகள் விரைவில் இணையும் என்றார் அவர்.

தொண்டர்கள் விரும்பும் கட்சியுடன் தேமுதிக கூட்டணி அமைக்கும்

சிவகாசி/ஸ்ரீவில்லிபுத்தூர், ஜன. 28: தொண்டர்கள் விரும்பும் கட்சியுடன் தேமுதிக கூட்டணி அமைக்கும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் செவ்வாய்க்கிழமை இரவு 'உள்ளம்தேடி இல்லம் நாடி' கேப்டன் ரத யாத்திரை நடைபெற்றது. இதையொட்டி, பிரேமலதா, கட்சியின் இளைஞரணிச் செயலர் விஜயபிரபாகரன் உள்ளிட்டோர் சிவகாசி என். ஆர்.கே.ஆர். சாலையிலிருந்து விருதுநகர் புறவழிச் சாலை வரை ஊர்வலமாகச் சென்றனர்.

பின்னர், அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது:

விருதுநகர் என்றாலே விஜயகாந்த் கோட்டைதான். வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில் இளைஞரணிச் செயலர் விஜயபிரபாகரன் எங்கு போட்டியிடுவார் என விரைவில் அறிவிப்போம்.

பேரவைத் தேர்தலுக்குப் பிறகு, பட்டாசு ஆலைகளில் விபத்து ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்படும் சீன பட்டாசுகள் தடுக்கப்படும். பணம் கொடுத்து பல அரசியல் கட்சிகள் கூட்டத்தைக் கூட்டுகின்றன. ஆனால், தேமுதிக கூட்டத்துக்கு வருபவர்கள் விஜயகாந்தின் அன்புக்கு கட்டுப்பட்டு வருகிறார்கள். வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில் தொண்டர்கள் விரும்பும் கட்சியுடன் தேமுதிக கூட்டணி அமைக்கும் என்றார் அவர்.

விஜயபிரபாகரன் பேசியதாவது:

கடந்த மக்களவைத் தேர்தலில் நான் தோல்வி அடைந்திருக்கலாம். ஆனால், மக்களின் மனதில் இடம் பெற்றுவிட்டேன். வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில் தேமுதிக எந்தக் கூட்டணிக்குச் செல்கிறதோ அந்தக் கூட்டணிதான் வெற்றி பெறும் என்றார் அவர்.

சட்டம்-ஒழுங்கு கேள்விக்குறி: ஸ்ரீவில்லிபுத்தூரில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் பிரேமலதா விஜயகாந்த் கூறியதாவது:

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் 'உள்ளம் தேடி இல்லம் நாடி' என்ற தலைப்பில் தேமுதிக நிர்வாகிகள் சந்திப்பும், கேப்டன் ரத யாத்திரை என்ற பெயரில் மக்கள் சந்திப்பும் நடத்தி உள்ளோம். பிரசார பயணம் முடிந்து பிப்ரவரி 3-ஆம் தேதி சென்னைக்கு திரும்பிய பிறகு, கூட்டணி குறித்து ஆலோசித்து அறிவிக்கப்படும்.

இந்தியாவிலேயே தமிழகம்தான் பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலம் என முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியது அவரது கருத்து. தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது. திமுக ஆட்சியில் 50 சதவீதம் நல்லது நடந்துள்ளது. 50 சதவீத கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளது என்றார் அவர்.

RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ DEPARTMENT

TENDER NOTICE No.A10/3660/2025 Dated: 27.01.2026

FORM OF CONTRACT: ITEM RATE (Two Cover System)

For and on behalf of the Governor of Tamil Nadu, Additional Collector (D), DRDA, Cuddalore District invites e-bids (Two Cover System) for Procurement of Steel rods for the year 2026-27.

Sl. No	Name of work	Approximate Maximum value	Period of Contract
1.	Procurement of Steel rods for the year 2026-27	Rs. 844.70 lakh	12 Months

1. For details, visit www.tntenders.gov.in
2. The e-bid document can also be downloaded free of cost from 29.01.2026.
3. Amount of Earnest Money Deposit will be 1% of the estimated value.
4. Important dates:

1.	Last Date and time for downloading of eBid Document	06.02.2026 upto 3.00 pm
2.	Last Date and time for Online Submission of the eBid Document	06.02.2026 upto 3.00 pm
3.	Date and Time of online opening of the eBid Document	06.02.2026 upto 5.00 pm

5. Other details can be seen in the bidding document.

DIPR.455/Tender/2026 **Additional Collector (D), DRDA, Cuddalore.**

கோரிக்கை அறிவிப்பு

இப்படம் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட் ... [illegible] ... டிரஸ்டின் பெயர்: Arcil-Trust-2026-015

கடன்தாரர் பெயர் / கூட்டுக்கடன்தாரர் பெயர் / ஜாமீன் தாரர்கள் / கடன் கணக்கு எண்கள்	கோரிக்கை அறிவிப்பு நாள் & தொகை	சொத்து விவரம்
திரு. [illegible] (வாடிக்கையாளர் எண் L10391065)	05-ஜனவரி-2026, ரூ.2763779.51/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து அறுபத்து மூவாயிரத்து எழுநூற்று எழுபத்தொன்பது மற்றும் ஐம்பத்தொரு பைசா மட்டும்)	[illegible] சர்வே எண்: 272/1, மனை எண் 11, 12, [illegible] 625002 ... 857.00, 760.00 ... [illegible]
திரு. [illegible] (வாடிக்கையாளர் எண் L10418240)	05-ஜனவரி-2026, ரூ.673472.74/- (ரூபாய் ஆறு லட்சத்து எழுபத்து மூவாயிரத்து நானூற்று எழுபத்து இரண்டு மற்றும் எழுபத்து நான்கு பைசா மட்டும்)	[illegible] சர்வே எண்.13/1A1, வார்டு 1, ... 625106 ... 1660.00, 459.00 ... [illegible]
திருமதி. [illegible] (வாடிக்கையாளர் எண் L10468995)	05-ஜனவரி-2026, ரூ.697919.7/- (ரூபாய் ஆறு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொள்ளாயிரத்து பத்தொன்பது மற்றும் எழுபது பைசா மட்டும்)	[illegible] சர்வே எண் 309/3, பட்டா எண். 865, நிலக்கோட்டை ... திண்டுக்கல் தமிழ்நாடு 624208 ... 6976.00, 540.00 ... [illegible]

[illegible]

இடம் : மதுரை, தமிழ்நாடு
நாள் : 29.01.2026

அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி(இந்தியா) லிமிடெட்

CIN எண்.: U65999MH2002PLC134884, இணையதளம்: www.arcil.co.in
பதிவு அலுவலகம்: [illegible] 400 028. தொலைபேசி: +91 2266581300

NOTICE

I, Service No.JC 845768H, Rank: Nb/Sub(GD) Name: **M.KARUPPIAH** residing at No. 1/220 Allamanayakanpatti, Seelnayakanpatti, Peraiyur Taluk, Madurai District, Tamil Nadu-625535. In my army records, the letter 'K' (initial) is missing before my wife's name instead of her correct name **K.Saraswathy**

தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை

ந.க.எண்.7056/2025/அ3 சேலம் மாவட்டம் நாள்.27.01.2026

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்ட சேமிப்பு நிதி (MGSMT SAVINGS FUND) மற்றும் சேமிப்பு நிதி (SAVINGS FUND) 2025- 26 தாரமங்கலம் மற்றும் ஓமலூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சாலைகளை மேம்படுத்துதல் பணிகள் குறுகிய மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் அவர்களால் தாரமங்கலம் மற்றும் ஓமலூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சாலைகளை மேம்படுத்துதல் பணியினை மேற்கொள்ள மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 29.01.2026 முதல் 06.02.2026 வரையிலான காலத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. அ) மின் ஒப்பந்தப் படிவம் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 29.01.2026 முதல் 06.02.2026 மாலை 3.00 மணி வரை
ஆ) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 06.02.2026 மாலை 4.00 மணி

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்,
செ.ம.தொ.இ./ 536 /ஒப்பந்தப்புள்ளி/2026 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம்-636 001.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

பயிர் பாதுகாப்பு மையம். த.வே.ப.க. கோயம்புத்தூர் - 641 003
மின்அஞ்சல்: directorcpps@tnau.ac.in
தொலைபேசி எண் : 0422/6611237

எண்.ப.பா.மை.பூச்சியியல் துறை/SERS/ உபகரணம் வாங்குதல். 2025 /26 தேதி: 27.01.2026

டெண்டர் அறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003 இல் பின்வரும் Surface Enhanced Raman Spectroscopy (SERS) உபகரணம் வாங்குவதற்காக உற்பத்தியாளர்கள் மற்றும் அவர்களின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடமிருந்து இரண்டு ஏல முறையில் (தொழில்நுட்ப ஏலம் மற்றும் விலை ஏலம்) டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன.

கருவியின் பெயர்	தேவையான எண்ணிக்கை	முன் வைப்பு தொகை
சர்ஃபேஸ் என்ஹான்ஸ்ட் ராமன் ஸ்பெக்ட்ரோஸ்கோபி - Surface Enhanced Raman Spectroscopy (SERS)	04	5,00,000/-

ஏலத்திற்கு முந்தைய கூட்டம் 02.02.2026 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெறும்

ஒப்பந்தபுள்ளி ஆவணங்களை (விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்) https://tnau.ac.in/site/tenders/ மற்றும் https://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்.

செ.ம.தொ.இ/504/ஒப்பந்தப்புள்ளி/2026 இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், த.வே.ப.க. கோயம்புத்தூர் / 641 003

INDEL MONEY Corporate office: **Indel Money Limited,** IIIrd Floor Indel House, Changampuzha Nagar, South Kalamassery, Ernakulum -682033 , Ph: 0484-2933999 E:customercare@indelmoney.com **GOLD AUCTION NOTICE**

எங்களுடைய பல்வேறு கிளைகளில் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள் 02-03-2026 தேதி காலை 11.00 மணிக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள கிளையில் வைத்து பகிரங்க ஏலம் விடப்படும் என்பதனை இதன் மூலம் தெரியப்படுத்தி கொள்கிறோம். நகை கடன் பெற்றும் வட்டி செலுத்தாமல் மீட்காமல் விட்ட நகைகளைத்தான் ஏலம் விடுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏலத்தில் விடப்படும் கடன் எண்களின் விபரம் அந்தந்த கிளைகளின் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. இதற்கு மேல் எந்த அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

ஆரப்பாளையம் -10804460010070, **உசிலம்பட்டி** -19504460008430, 0446/08436, 0446/08484, 0446/08528, **நத்தம்** - 15304460016828, **தொண்டி** - 28604440003761, 28604460003811, 0446/03844, **பரமக்குடி**-11404460024756, **மானாமதுரை** - 11304460025845, 0446/26044, 0446/26057, 11304530026027, **ஆண்டிப்பட்டி** -11204460012292, 0446/12330, 0446/12331, 0446/12333, 0446/12363, 0446/12364, **சிவகங்கை** - 13304460013466, **ஐயர் பங்களா** -14004540009055,

அறிவிக்கப்பட்ட தேதியில் கிளையின் ஏலம் நிறைவடையவில்லை என்றால், Shriram Automall India Limited (SAMIL) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://gold.samil.in மற்றும் e-Procurement Technologies Limited (AuctionTiger) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://egold.auctiontiger.net வழியாக 04-03-2026 தேதி 12.30 PM முதல் 3.30 PM வரை நடைபெறும். 04-03-2026 தேதி அன்று e-ஏலம் நிறைவடையவில்லை என்றால், அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அடுத்த வேலை நாட்களில் மீண்டும் ஏலம் விடப்படும்.

இன்டல்மணி லிமிடெட்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006. தொலைபேசி : 044 - 28332115. இணையதளம் : www.tvsholdings.com மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com
CIN : L64200TN1962PLC004792

31 டிசம்பர் 2025 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் (ரூ. கோடிகளில்)

வ.எண்	விவரங்கள்	தனித்தது: முடிவடைந்த காலாண்டு 31.12.2025 (தணிக்கை செய்யப்படாதது)	தனித்தது: முடிவடைந்த காலாண்டு 31.12.2024 (தணிக்கை செய்யப்படாதது)	தனித்தது: முடிவடைந்த ஆண்டு 31.03.2025 (தணிக்கை செய்யப்பட்டது)	ஒருங்கிணைந்தது: முடிவடைந்த காலாண்டு 31.12.2025 (தணிக்கை செய்யப்படாதது)	ஒருங்கிணைந்தது: முடிவடைந்த காலாண்டு 31.12.2024 (தணிக்கை செய்யப்படாதது)	ஒருங்கிணைந்தது: முடிவடைந்த ஆண்டு 31.03.2025 (தணிக்கை செய்யப்பட்டது)
1	வியாபார நடவடிக்கைகளின் மூலம் மொத்த வருமானம்	57.95	149.43	637.30	15,275.63	11,359.16	44,993.16
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (தொடரப்படாத செயல்பாடுகள் உட்பட)	24.15	114.61	410.09	1,464.50	1,023.64	3,616.12
3	விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (தொடரப்படாத செயல்பாடுகள் உட்பட)	23.83	114.61	410.09	1,414.10	1,023.64	3,616.12
4	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	21.20	85.07	352.16	969.39	685.45	2,409.25
5	நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம் / (நஷ்டம்)]	20.76	83.89	349.73	1,177.37	647.48	2,458.30
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-)	10.12	10.12	10.12	10.12	10.12	10.12
7	ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)	-	-	1,601.02	-	-	4,677.27
8	பங்கு பிரீமியம் கணக்கு	36.42	36.42	36.42	36.42	36.42	36.42
9	நிகர மதிப்பு	1,655.57	1,551.06	1,604.56	4,792.03	3,615.78	3,685.20
10	நிலுவையில் உள்ள கடன்	943.81	643.64	943.81	34,973.55	27,998.91	32,488.03
11	நிலுவையில் உள்ள மீட்டுக் கொள்ளக்கூடிய முன்னுரிமை பங்குகள் (ஹோல்டிங் கம்பெனி மட்டும்)	-	-	-	-	-	-
12	கடன் - பங்கு விகிதாசாரம் (விதிவிலக்கான வகைகள் உட்பட) (மடங்கு)	0.57	0.03	0.45	5.10	6.10	5.93
13	பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (அ) அடிப்படை (ரூபாயில்)	10.48	42.05	174.06	243.75	190.81	575.41
	(ஆ) டைல்யூட்டட் (ரூபாயில்)	10.48	42.05	174.06	243.75	190.81	575.41
14	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	NA	NA	NA	NA	NA	NA
15	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	NA	NA	NA	NA	NA	NA
16	கடன் சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு)	NA	NA	NA	NA	NA	NA
17	வட்டி சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு)	NA	NA	NA	NA	NA	NA
18	நடப்பு விகிதம் (மடங்கு)	NA	NA	NA	NA	NA	NA
19	நீண்ட கால கடனிற்கும் செயல்பாடு மூலதனத்திற்குமான விகிதாசாரம் (மடங்கு)	NA	NA	NA	NA	NA	NA
20	கணக்குகளின் மூலம் பெறவேண்டியவற்றிற்கு வாராக்கடன் விகிதம் (மடங்கு)	NA	NA	NA	NA	NA	NA
21	நடப்பு பொறுப்புகளின் விகிதம் (மடங்கு)	NA	NA	NA	NA	NA	NA
22	மொத்த கடனுக்கு மொத்த சொத்துக்களின் விகிதம் (மடங்கு)	0.35	0.28	0.34	0.59	0.60	0.60
23	கடனாளிகளின் சுழற்சி விகிதம் (மடங்கு)	NA	NA	NA	NA	NA	NA
24	சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (மடங்கு)	NA	NA	NA	NA	NA	NA
25	செயல்பாட்டு இலாப விகிதம் (%)	NA	NA	NA	NA	NA	NA
26	நிகர இலாப விகிதம் (%)	37.10	56.53	54.68	6.67	5.97	5.35

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ம் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 33 மற்றும் 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளம் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.tvsholdings.com) ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. புதிய தொழிலாளர் நெறிமுறைகள் நவம்பர் 21, 2025 அன்று நடைமுறைக்கு வந்தன. [illegible]
3. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
4. டிசம்பர் 31, 2025 உடன் முடிவடைந்த காலாண்டுக்கான நிறுவனத்தின் நிதிநிலை முடிவுகளை QR குறியீட்டின் மூலம் அணுகலாம்.

தேதி : 28.01.2026

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
வேணு சீனிவாசன்
தலைவர்

பொது அறிவிப்பு

ICICI Bank கிளை அலுவலகம்: ICICI வங்கி லிட். 4/10, மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஓசூர் மெயின் ரோடு, பெங்களூர் - 560068.

பின்வரும் கடன்தாரர்/கள் ICICI வங்கியிடம் இருந்து பெற்ற கடன் வசதியின் அசல் மற்றும் வட்டியை திரும்ப செலுத்த தவறிவிட்டபடியால் , அந்தக்கடன்கள் செயல்படாத சொத்துகள் (NPA) என பகுக்கப்பட்டுள்ளன. கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க சட்டம்-2002-இன் பிரிவு 13(2)-இன் கீழ் அவர்களுக்கு கடைசியாக அறியப்பட்ட அவர்களது முகவரிகளுக்கு ஓர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் அது பட்டுவாடா ஆகவில்லை.மேலும் எனவே இந்த பொது அறிவிப்பு மூலம் அவர்களுக்கு இங்கே அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன்தாரர்/கூட்டு-கடன்தாரர்/ஜாமீன்தாரர் பெயர்/(கடன் கணக்கு எண்) & முகவரி	நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய கடனீட்டு சொத்து முகவரி	அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள்/ அறிவிப்பு நாள் அன்றுள்ளபடி நிலுவைத்தொகை	NPA நாள்
1	A ஒன் டைரோலிங்க்ஸ் உரிமையாளர் R மகேந்திரன் அவர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது, எண் 183-Y/1, பெரியார் காலனி, ஆலமரத்துப்பட்டி சாலை, திருத்தங்கல், சிவகாசி-626130 / 617205014347	கடன் ஆவணம்/சொத்து ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி அமைவிடம்: விருதுநகர் பதிவு மாவட்டம், திருத்தங்கல் சார் பதிவு மாவட்டம், சிவகாசி வட்டம், கீழத்திருத்தங்கல் கிராமத்தில் அமைந்துள்ள அயன் புஞ்சை சர்வே எண் 1051-இல் பரப்பளவு 3277.5 சதுர அடி நிலம் மற்றும் கதவு எண் 182/1 கொண்ட வீடு. கீழ்க்கண்ட எல்லைகளுக்குள், அளவீடுகள் கிழமேல் இருபுறமும் 60 அடி மற்றும் தென்வடல் மேல்புறம் 54.5 அடி, தென்வடல் கிழபுறம் 54.75 அடி மொத்தம் 3277.5 சதுர அடி (304.61 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்டது. இந்தச் சொத்து வார்டு எண்: 03, ஆலமரத்துப்பட்டி சாலை, திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. உரிமையாளர்: R மகேந்திரன், வடக்கு: சின்னதுரைக்குச் சொந்தமான நிலம், தெற்கு: 9 அடி அகல கிழக்கு-மேற்கு பொதுப் பாதை, கிழக்கு: சுப்பிரமணியனுக்குச் சொந்தமான நிலம், மேற்கு: மீனாட்சிசுந்தரத்தால் விற்கப்பட்ட நிலம்.	19.12.2025 ரூ. 23,96,121.50/-	31/03/ 2022

அறிவிப்புக்கான மாற்று சேவைக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட கடன்தாரர்(கள்) மற்றும்/ அல்லது அவர்களது ஜாமீன்தாரர்கள் (பொருந்தும் எனில்) இந்த அறிவிப்பு நாளில் இருந்து 60 நாள்களுக்குள் நிலுவையிலான தொகையை செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இல்லையெனில் , கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம்-2002-இன் விதிமுறைகளின்படி மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாள் : 29.01.2026
இடம் : மதுரை

உண்மையுடன், அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI வங்கி லிட்.-க்காக

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல்/நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002ன் படி

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களாகிய 1) **திரு. C. சந்திரமோகன் த/பெ. சந்திர போஸ், எண்.6/4/3, லக்ஷ்மி நகர், நிலக்கோட்டை - 624208. (2) திருமதி சண்டமாள் க/பெ. சந்திர போஸ், எண்.6/4/3, லக்ஷ்மி நகர், நிலக்கோட்டை - 624208. (3) திரு. சந்திரசேகரன் த/பெ. சந்திர போஸ், எண்.6/4/3, லக்ஷ்மி நகர், நிலக்கோட்டை - 624208** ஆகியோர் பெற்ற கடன் நிலுவைத் தொகை **22-01-2026** அன்றுள்ளபடி **ரூ.1,15,46,775/- (ரூபாய் ஒரு கோடியே பதினைந்து லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து எழுநூற்று எழுபத்து ஐந்து மட்டும்)** மற்றும் **23-01-2026** முதல் பின்வட்டி மற்றும் வங்கிக்கு சேரவேண்டிய வேறு ஏதேனும் பாக்கிகள், இதர செலவுகள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சொத்து 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், விதி 8(6)&9-ன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி அவர்களால் சீலிடப்பட்ட டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு : எங்களது **434-நிலக்கோட்டை கிளை,** உங்களில் எண்.1 கொண்டவரது வேண்டுகோளின் பேரில், உங்களில் எண்கள் 2 & 3 கொண்டவர்கள் உடன் கடனாளிகளாகவும் விளங்குவதால் (CUB OSL SPECIAL-BR:501812080063684) -ன் கீழ் **17.00%** வட்டி விகிதத்தில் **24-04-2020** அன்று **ரூ.4,40,000/-** நீட்டிப்பு நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த கடன் கணக்கானது **30-09-2019** அன்று **NPA** ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் **22-01-2026** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையானது **ரூ.12,14,949/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து பதிநான்காயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஒன்பது மட்டும்)** மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தும் தேதி வரை **23-01-2026** முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டியும் கூடுதல் அபராத வட்டி 2% மாதாந்திர வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தின் விவரம்
(சந்திர போஸ் மகன் திரு. C. சந்திரமோகன் அவர்களுக்கு சொந்தமான சொத்து)

திண்டுக்கல் பதிவு மாவட்டம், ஆத்தூர் சார்-பதிவாளர் அலுவலகம், நிலக்கோட்டை தாலுகா, பச்சமலையன் கோட்டை கிராமம், சர்வே எண்.237/1B, 0-11-0 ஹெக்டேர்ஸ் 0-27½ சென்ட் மேற்கு பகுதியில் 0-06-07 ஹெக்டேர் 0-15 சென்ட். இதன் பரப்பளவு : கிழக்கு-மேற்காக இருபுறமும் 133½ அடி, வடக்கு-தெற்காக இருபுறமும் 49 அடி. மொத்த பரப்பளவு 6,541.5 சதுர அடி. எல்லைகள் : மேற்கில் - வடக்கு-தெற்கான ரோடு, வடக்கில் - சிவனாண்டித்தேவர் மற்றும் இதரர்கள் நிலம், தெற்கில் - பரமத்தேவர் மற்றும் இதரர்கள் நிலம், கிழக்கில் - சர்வே எண். 237/1B-ல் சந்திரசேகரனுக்கு ஒதுக்கப்பட்ட 0-12¼ சென்ட் சொத்து (நிலம்). மேற்சொன்ன வீட்டு மனையின் பரப்பளவு 6,541.5 ச.அடி (607.72 சதுர மீ.) மற்றும் அனைத்து தேவையான மற்றும் வழக்கமான உரிமை உள்பட

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ. 10,00,000/-
(ரூபாய் பத்து லட்சம் மட்டும்)

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை விவரம்

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதி : **16-02-2026**

இடம் : **சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், நிலக்கோட்டை கிளை, S.எண்.117/2C1A, மெயின் ரோடு, நிலக்கோட்டை, திண்டுக்கல் - 624208. தொலைபேசி எண். 04543-230114, செல் எண்கள். 9345625114, 8925876331**

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

(1) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் ஏலத்தில் பங்கு கொள்ள நேரில் ஆஜராக வேண்டும் மற்றும் தனக்காகவே ஏலம் கேட்பதாக எழுத்துபூர்வமான ஒரு உறுதிமொழியினையும் அளிக்க வேண்டும். (2) விருப்பமுடைய டெண்டர்தாரர்/ஏலம் கேட்க விரும்புவோர், டெண்டர் படிவங்களை **மேனேஜர், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், நிலக்கோட்டை கிளை, S.எண். 117/2C1A, மெயின் ரோடு, நிலக்கோட்டை, திண்டுக்கல் - 624208ல்** பெற்றுக் கொள்ளலாம். (3) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் தங்களது விலைப்புள்ளிகளை நிர்ணயிக்கப்பட்ட டெண்டர் படிவத்தில் சீலிடப்பட்ட உறைகளில் வைத்து, அத்துடன், **"சிட்டி யூனியன் பேங்க்"** என்ற பெயரில் பெறப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட/குறைந்தபட்ச விலையின் 10% தொகைக்கான **Pay Order/ கேட்பு வரைவோலையினை** பிணை வைப்புத் தொகையாக இணைத்து **"அதிகாரபூர்வ அதிகாரி, சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்"** என முகவரியிட்டு, இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதியன்று **நண்பகல் 12.00 மணி** அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். (4) விருப்பமுள்ள டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் சொத்தினை பார்வையிடவும் மற்றும் இதர விவரங்களுக்கும் **தொலைபேசி எண். 04543-230114, செல் எண்கள். 9345625114, 8925876331ஐ தொடர்பு கொள்ளவும்.** (5) இந்த சொத்து(கள்) "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். (6) சீலிடப்பட்ட டெண்டர்கள் விருப்பமுள்ள ஆஜராகியுள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதியன்று **பிற்பகல் 01.00 மணிக்கு** திறக்கப்படும். பொதுவாக, மூடப்பட்ட நிலையிலான டெண்டர் விற்பனையாக இருந்த போதிலும், மூடப்பட்ட நிலையிலான டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள விலைப்புள்ளியைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர விரும்புவோர்களின் விருப்பத்தின் பேரில் அதிகாரபூர்வ அதிகாரியின் கட்டளையின் பேரில், வெளிப்படையான திறந்த ஏலத்தினை நடத்திடலாம். இந்த நிலையில், அதிகபட்ச ஏலம் கோருபவருக்கே, இந்த விற்பனை வழங்கப்படும். எனினும், இந்த விற்பனை சிட்டி யூனியன் வங்கியினால் உறுதி செய்யப்பட வேண்டும். (7) வெற்றிபெறும் டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் விற்பனை விலையில் **25%** தொகையை **(பிணைவைப்புத் தொகை செலுத்தியது உள்பட)** விற்பனை **உறுதி செய்யப்பட்ட உடனேயே** செலுத்த வேண்டும். மீதி 75% தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள்ளாக செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்டபடி செலுத்தத் தவறினால் அவரால் செலுத்தப்பட்ட **25%** தொகை முழுவதையும் அவர் இழக்க நேரிடும். (8) குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் மொத்த விற்பனை தொகையையும் பெற்றுக்கொண்ட பின்னரே, வெற்றி பெற்ற டெண்டர்தாரர் / ஏலதாரருக்கு அதிகாரபூர்வ அதிகாரியால் விற்பனை சான்றிதழ் (Sale Certificate) வழங்கப்படும். (9) பதிவு செலவு, பதிவுக் கட்டணம், சட்டப்படியான மற்ற செலவுகளை வெற்றிபெற்ற ஏலம்கேட்டவரே ஏற்க வேண்டும். (10) அரசு, அரசு நிறுவனம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கான சொத்து சம்பந்தப்பட்ட சட்டபூர்வ வீட்டு வரி, மின்சாரக் கட்டணம், TDS, GST மற்றும் இதர பாக்கிகளை வெற்றிபெறும் ஏலம்கேட்டவரே செலுத்த வேண்டும். (11) எந்தவித காரணமும் கூறாமல் விலைப்புள்ளிகளை ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ரத்து செய்ய அதிகாரபூர்வ அதிகாரிக்கு முழு உரிமை உண்டு.

இடம் : கும்பகோணம், தேதி : 28-01-2026 அதிகாரபூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001, CIN - L65110TN1904PLC001287, போன் : 0435-2402322, ஃபேக்ஸ் : 0435-2431746, இணையதளம் : www.cityunionbank.com